

புகழ்மாலை
கவிஞர்
சுரதா

# புகழ்மாலை

கவிஞர் சுரதா

சுரதா பதிப்பகம்
56–அ, டாக்டர் லட்சுமணசாமி சாலை,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை – 600 078.
தொலைபேசி எண் : 24728508

முதற்பதிப்பு : ஜனவரி, 1996
இரண்டாம் பதிப்பு : மே, 2000
மூன்றாம் பதிப்பு : ஜூன், 2001

உரிமை : ஆசிரியருக்கு.

விலை : **ரூ. 20.00**

ஒளி அச்சு : கிளாசிக் கம்ப்யூட்டர்ஸ், சென்னை-78.
அச்சிட்டோர் : சேகர் கிராபிக்ஸ், சென்னை-5.

# என்னுரை...

நாம் எந்தத் துறையில் ஈடுபட்டாலும், அந்தத் துறையைச் சார்ந்த முன்னோடிகளை நினைத்துப் பார்ப்பது நன்றியுடைமையாகும். அப்படி நம் துறை சார்ந்த முன்னோடிகளை நினைத்துப் பார்ப்பதைப் போன்றே பல்வேறு துறை சார்ந்தவர்களைப் பற்றியும் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். அவர்களைப்பற்றி நம்முடைய எழுத்துக்களில் பதிவு செய்ய வேண்டும்.

நான் பல்வேறு காலகட்டங்களில் பல துறைகளில் சிறந்து விளங்கிய பெருமகன்களைப்பற்றி எழுதிய கவிதைகளின் தொகுப்பே இந்தப் புகழ்மாலை.

இந்தப் புகழ்மாலையில் புகழின் உச்சிக்கே சென்றுவிட்ட அறிஞர் பெருமக்கள், கவிஞர் பெருமக்கள், அரசியல் வாதிகள், வள்ளல் பெருமக்கள் ஆகியோரும் அடங்குவர்.

புகழ் பெற்ற பலரையும் நினைவுபடுத்தி நான் எழுதிய இந்நூலுக்கு எந்தப் பெயர் வைக்கலாம் என்று பலநாள் சிந்தித்துப் பார்த்தேன். இறுதியாக இந்தத் தலைப்பு எண்ணத்தில் உதித்தது. இதுதான் இந்த நூலுக்குரிய சிறந்த தலைப்பு என்றே கருதுகிறேன்.

எதையுமே உரையில் சொல்வதைக் காட்டிலும், கவிதையில் சொல்லுவது சிறப்பாக மட்டுமின்றி, மனதில் பதியும் வகையில் அமையும்.

வளரும் கவிஞர்களும், எழுத்தாளர்களும் பெருமக்கள் பலரையும் நினைவு கூர்ந்து தொடர்ந்து எழுதலாம். தனது பெற்றோர் பற்றிக்கூட எழுதுவது மிகச் சிறப்பாக இருக்கும்.

புகழ்பெற்ற பலருக்கு கவிமாலையாக நான் தொடுத்த இந்தப் புகழ் மாலையை படித்துப் பயன்பெறுங்கள்.

அன்புடன்,

14-01-1996

**சுரதா**

## சீதக்காதி

(17 ஆம் நூற்றாண்டு)

மனத்தையே மதிப்பார் உண்டு
மதத்தையே மதிப்பார் உண்டு
தனத்தையே மதிப்பார் உண்டு
தரணியில் சிலபேர் தங்கள்
இனத்தையே சிறந்த தாக
எண்ணுவர் ; சீதக் காதி
அனைத்தையும் மதித்து வந்தார் !
அறிவையும் மதித்து வந்தார் !

படிப்பினில் இன்பம் கண்ட
படிக்காசுப் புலவர் போன்ற
வடித்தநூல் வல்லார்க் கெல்லாம்
வழங்கிய முஸ்லீம் வள்ளல்
கொடுப்பதில் குமண னாகிக்
கூர்மையில் அக்ப ராகி
அடுக்கிய உலகம் மூன்றாம்
அங்கெல்லாம் கீர்த்தி பெற்றார்.

# உமறுப் புலவர்

(17 ம் நூற்றாண்டு)

அமுதத் தமிழ்க் கலைஞர்
அழகு நடையறிஞர்
உமறுப் புலவரடீ – கண்ணம்மா
உவமைக் கவிஞரடீ !

சீறாப் புராண மதைத்
தீட்டிய செல்வரடீ
மாறாப் புலவரடீ – கண்ணம்மா
மற்றொரு கம்பரடீ !

செயற்கைப் புலவர்களின்
செய்யுள் பிழைப்பதில்லை !
இயற்கைப் புலவரடீ – கண்ணம்மா
இறந்தும் சிறந்தாரடீ !

# வேதநாயகம் பிள்ளை

(1826 – 1889)

வேதனை நாயகர் வேடிக்கை நாயகர்
 வீண்கதை நாயகரோ – அவர்
சாதனை நாயகர் சாத்திர நாயகர்
 தண்டமிழ் நாயகரே,!

சத்துசித் தானந்த தத்துவ நீதிநூற்
 சாத்திரம் பாடியவர் – அவர்
புத்திசித் தானந்த போதனை கூறிய
 புத்தக ஞானியவர் !

போற்றும் புதுமை புரிந்து சிறந்தவர்
 பொய்யா மொழிப்பெரியார் – இளங்
கீற்று நிலாஒளி உள்ளம் வளர்த்த
 கிறித்துவ பாரதியார் !

# உ.வே. சாமிநாதையர்

(1855 – 1942)

ஆதிநூல் அனைத்தும் கற்றே
 ஆழ்ந்தசிந் தனையைப் பெற்றே
நீதிநூல் வழியில் வாழ்ந்து
 நிலையான கீர்த்தி சேர்த்த
வேதநா தையர்; செய்யுள்
 வித்தைநா தையர்; நல்ல
சாதுநா தையர்; உ.வே.
 சாமிநா தையர் ஆவார்.

ஒருசிலர் எல்லாம் செய்வர்
 செய்வதை ஒழுங்காய்ச் செய்யார்.
ஒருசிலர் ஒன்றே செய்வர்.
 செய்யினும் ஒழுங்காய்ச் செய்வர்.
அரும்பெரும் செயல்கள் செய்யும்
 ஆற்றலோர் சிலர்க்கே உண்டு.
திருவளர் ஐயர் செய்த
 சேவையோ அரிய சேவை !

பழங்காலச் சுவடி தேடும்
பணியிலே ஈடு பட்டு
விழுங்காலம் வரும்வ ரைக்கும்
வேதியர் தொண்டு செய்தார்.
செழுங்காந்தள் மலரைப் போன்று
சிவந்தவர் செய்த தொண்டோ
ஒழுங்கான தொண்டு; கல்வி
உலகமே போற்றும் தொண்டு.

நாமெலாம் பத்துப் பாட்டை
நன்னூலைப் பார்க்கின் றோமே
ஓமநா தைய ரோஅவ்
ஓலையை அச்சி லிட்டார்?
பூமிபோற் பொறுமை கொண்ட
புலவராம் இவரே இட்டார்.
சாமிநா தைய ரின்றேல்
சங்கநூல் மறைந் திருக்கும்!

ஆயிரம் பிறைகள் கண்டார்
ஆணிப்பொன் ஐயர். பெற்ற
தாயினும் சிறந்த தான
தமிழுக்கே தம்மை ஈந்தார்.
தூயநூற் சுவடி தந்த
தூயவர், பாடல் பெற்ற
கோயில்போ லானார், தஞ்சைக்
கோபுரக் கலச மானார்!

# பாஸ்கர சேதுபதி

(19 ஆம் நூற்றாண்டு )

(ஒயிற்கும்மி)

ஆற்றல் மிக்கவர் ஆட்சி புரிந்தவர்
ஆஸ்திக நீதிபதி – அவரே
பாஸ்கர சேதுபதி – புலவர்
போற்றுந்தொல் காப்பியப் புத்தகம் போன்றவர்
போனபின் ஏதுகதி ?

நற்றமிழ் கற்றவர் நன்மை புரிந்தவர்
நாதச் சுவையரசர் – இராம
நாத புரத்தரசர் – கவிதைப்
பற்றினைப் பற்றாகப் பற்றியொப் பற்ற நூல்
பாடிய பாட்டரசர் !

கிள்ளிக் கொடுக்காமல் அள்ளிக் கொடுத்தவர்
கேள்வி நக்கீரரவர் – சிறந்த
வாள்வினை வீரரவர் – இளையான்
பிள்ளை எனுங்கவி ராயரைப் போன்றவர்
பேருப காரியவர் !

# பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்
(1862 – 1934)

சுவை தூங்கும் கரும்பைத் தின்று
சவைபார்க்க விரும்பி டாமல்
புவிபோற்றும் தமிழி லுள்ள
புதுச்சுவை உண்டு வந்த
கவிவேந்தர் பின்னத் தூரார்
கற்பவை கற்ற மேதை.
அவதானி யாரின் மைந்தர்
ஆராய்ந்த கல்வி யாளர்.

தனியாற்றல் பெற்றி ருந்த
தமிழ்மொழி ஐய ருக்கோ
நினைவாற்றல் அதிகம் – அன்னார்
நெஞ்சத்தில் சாதி பேத
இனவேற்று மைகள் வந்தே
இடித்திட வில்லை. தீய
மனவேற்றுமை மைக்கும் அன்னார்
வழிவைத்து வாழ்ந்தா ரில்லை.

பாடினார் கோவை தூது
　　பாடினார்; கலம்ப கங்கள்
பாடினார்; உலாநூல் ஒன்று
　　பாடினார்; நரிவி விருத்தம்
பாடினார்; மருதப் பாட்டுப்
　　பாடினார்; சிவபுராணம்
பாடினார் நற்றி ணைக்கோர்
　　பழுதிலா உரையும் கண்டார்.

நாவணி தமிழ்ச்சொல் லோசை
　　நயத்தொடு பாடஞ் சொல்லிப்
பாவணி நயங்க ளோடு
　　பாடிய பின்னத் தூரார்
பூவணி மடந்தை மாதர்
　　புலவரைக் கலங்க விட்டே
ஆவணித் திங்கள் தோன்றி
　　ஆடியில் மறைந்து விட்டார்.

## பாண்டித்துரைத் தேவர்
(1867 – 1911)

" ஆயிரத்தெண் ணூற்றறுபத் தேழாம் ஆண்டில்
அவதரித்த தேவர் யார் ? " " தெரியா தையா "
" தூயதுதி மஞ்சரிநூல் சைவம் சார்ந்த
துதிநூற்கள் தொகைத்திரட்டுப் போன்ற நூற்கள்
நாயகியின் தேன்முத்த வண்ணப் பாடல்
நாட்டுக்குத் தந்தார்யார் ?" தெரியா தையா !"
" தீயசெயல் செய்யாத பொன்னு சாமித்
தேவரவர் புதல்வர்யார் ?" தெரியா தையா !"

" அப்பாவி ! செந்தமிழ்க்குத் தொண்டு செய்த
அறிஞரைநீ அறிந்து கொள்ளா திருக்கின் றாயே !
துப்பாய வானமழை வள்ளல் பாண்டித்
துரைத்தேவர் எனுமறிஞர் அவர்தான் தம்பி !
இப்போதோர் தமிழ்ச் சங்கம் மதுரை மண்ணில்
இருப்பதற்குக் காரணமே அவர்தான் தம்பி !
எப்போதும் மறவாதே அவரை ! நீபோய்
எங்குமுள தமிழர்க்கும் இதனைக் கூறு ! "

# ஞானியார் அடிகள்

(1873 – 1942)

கண்ணிரண்டும் கல்விக்கண் ஒன்றும் பெற்றுக்
காலமெல்லாம் தமிழுக்கும் சைவத் திற்கும்
தொண்டுசெய்தோர் பலராவர்; அவருள் காமச்
சுவைவிலக்கிச் செயற்கைசுகம் விலக்கி வாழ்ந்த
பண்டையநாள் சமணரைப்போல் செந்த மிழ்க்கும்
பரஞ்சோதி முனிவரைப்போல் சைவத் திற்கும்
எண்ணிறந்த பெருந்தொண்டு புரிந்து கீர்த்தி
ஏந்தியவர் ஞானியார் அடிக ளாவார் !

ஓரைந்து மொழியறிந்த புலியூர் ஞானி
ஒப்பின்றிப் பெருஞ்சைவம் பேசி வந்தார்.
ஈரஞ்செய் கின்றதமிழ் மொழிநுட் பத்தை
எழுத்தெழுத்தாய்ச் சொல்சொல்லாய் விளக்கி வந்தார்.
வீரஞ்செய் புறப்பொருளின் விளக்கம் ஆதீ
வேதாந்தம் சிந்தாந்தம் இவற்றை யெல்லாம்
காரஞ்செய் யாதகுரல் இனிமை யாலும்
கனிந்தெழுந்த பேச்சாலும் பாய்ச்சி வந்தார் !

கைச்சங்கம் எடுத்தூதும் கூட்டத் தார்க்கும்
கால்நடைகள் மேய்பார்க்கும் மற்ற வர்க்கும்
மெய்ச்சங்கம் எதற்காக ? எங்கட் கன்றோ
வித்தைவரும் ? என்று சிலர் பேசக் கேட்டுத்
தச்சன்கை உளிபதிந்த விரல்போ லானார்.
தமிழ்ச்சங்கம் தோன்றுதற்குத் துணையாய் நின்றார்
பொய்ச்சிந்தை மனுநீதி மயக்கம் தீர்த்துப்
பொய்யாத குறள்நீதி கூறி வந்தார்.

வெல்லுஞ்சொல் இதுவேயென் றறிந்து பேசி
வியப்பினிலே ஆழ்த்தியவர், பிறையைப் போன்ற
பல்லக்கின் மீதேறி இந்த நாட்டில்
பவனிவந்த திருநீற்றுச் சைவர். பாராங்
கல்லொக்கும் நெஞ்சத்தார் தம்மைத் தேமாங்
கனியொக்கும் அறிவுரையால் கனியச் செய்தார்.
முல்லைப்பூ மாலைக்கோ பாராட்டுக்கோ
மூதறிஞர் மயங்கியதே இல்லை கண்டீர் !

இளந்திரையன் என்பானோ பெரும்போர் வீரன்.
இருண்டகடல் நீந்தியவன். வீரங் காட்டி
வளர்ந்தபுகழ் பெற்றுயர்ந்த வேந்தன். அந்த
மாவீரன் நம்மவர்நெப் போல்யன் ஆவான்.
தளர்ந்தசெயல் செய்தறியாப் புலியூர் ஞானி
தமிழகத்தின் சாலமனே யாவார். நுட்பம்
அளந்தமனம் கொண்டவராம் அவர்போற் பேசும்
ஆற்றல்பெற்றார் இன்றிங்கே யாரு மில்லை !

# மறைமலை அடிகள்

(1876 – 1950)

பலவோசை நிறைந்த ' காடன்
	பாடி' யிற் பிறந்த பிள்ளை
விலையோசை கேட்டுக் கேட்டு
	வீணாகி வந்தோர் தம்மைக்
கலையோசை கேட்க வைத்துக்
	கண்களைத் திறந்து விட்டார்
மலைபேசக் கண்டோ மில்லை
	மறைமலை பேசக் கண்டோம் !

வேதத்தை 'மறைநூல்' என்றும்
	விவாகத்தை 'மன்றம்' என்றும்
சாதத்தை 'வெண்சோ' றென்றும்
	சபதத்தை ' ஆணை' என்றும்
மாதத்தைத் 'திங்கள்' என்றும்
	மறைமலை 'நம்சொல்' லாக்கிச்
'சோதித்த பொன்னே' போலும்
	தூயசெந் தமிழ்நூல் தந்தார்!

நம்மொழிப் புலமை யெல்லாம்
நடுத்தெருப் புலமை யாகும்
செம்மொழி பேசி வந்த
திருமறை மலையார் பெற்ற
மும்மொழிப் புலமை யன்றோ
முற்றிய புலமை; அன்னார்
தும்மலும் கல்வித் தும்மல் !
தூக்கமும் கல்வித் தூக்கம் !

மறைமலை கற்ற நூற்கள்
மற்றவர் கற்றா ரேனும்
மறைமலை கண்ட நுட்பம்
மற்றவர் கண்ட தில்லை !
மறைமலை இயக்கம் நாட்டின்
வரலாற்றை வளர்க்கும் ! நாகை
மறைமலை சேர்த்த கீர்த்தி
வாடாத கீர்த்தி யாகும் !

முல்லைக்கோர் காடு போலும்
முத்துக்கோர் கடலே போலும்
சொல்லுக்கோர் கீரன் போலும்
தூதுக்கோர் தென்றல் போலும்
கல்விக்கோர் கம்பன் போலும்
கவிதைக்கோர் பரணர் போலும்
வில்லுக்கோர் ஓரி போலும்
விளங்கினார் ! வென்றார் ! நின்றார் !

# பாரதியார்

(1882 – 1921)

சாரமே அற்ற வெற்றுச்
        சாத்திரம் கோத்து வந்த
பாரதி பலபேர். அன்னார்
        படைப்பினை உடைப்பில் தள்ளி
வீரமாய் அருட்பா வைப்போல்
        விளக்கமாய் வாழ்நா ளெல்லாம்
பாடினார் சுப்ர மண்ய
        பாரதி நாட்டுக் காக !

விண்தொடும் கீர்த்தி பெற்ற
        வீரர்கள் வாழ்ந்த நாட்டில்
'தண்ணடை எருமை' போன்று
        தமிழகர்கள் வாழக் கண்டு
கண்களில் ஈரம் காட்டிக்
        கலங்கினார் ; நிலைமை மாற்ற
'எண்ணினார்; புரட்சி செய்தார் ;
        எழுத்தினால் மேடைப் பேச்சால் !

பொய்யராய்ச் சமுதா யத்தின்
புரட்டராய் வாழ்வா ரெல்லாம்
" ஐயரா ? " என்று கேட்டார்
ஆவிபோம் வரையில் அன்னார்
மெய்யராய் வாழ்ந்தார். வாழ்வில்
வீணராய்க் கேட்டு வாங்கும்
கையராய் வாழ்ந்தார்க் கெல்லாம்
காலனாய்க் காட்சி தந்தார் !

எட்டைய புரத்தார் பாடல்
இனிப்பிலே பழுத்த பாடல்
பட்டினப் பாலை என்னும்
பாடல்போற் சிறந்த பாடல்
மெட்டோடு பரவும் பாடல்
மேனாடும் போற்றும் பாடல்.
ஒட்டிய இளமை போலே
உணர்ச்சியைத் தூண்டும் பாடல் !

பாரதி நம்நூற் றாண்டின்
பட்டினிப் புலவர். வீர
பாரதி நீண்ட காலம்
பாரினில் வாழ்ந்தா ரில்லை.
பாரதி தோற்றா ரில்லை,
பாடலால் பிழைத்தா ரில்லை.
பாரதி முற்றுப் பெற்றார்
பாடலால் 'உலகம்' பெற்றார் !

# திரு.வி.க.

(1883 – 1951)

எழுத்தினால் இனிய பேச்சால்
இடைவிடாத் தூய தொண்டால்
பழுத்தபே ரறிவால் கல்விப்
பார்வையால் நட்பால் நாட்டை
இழுத்தவர்; என்தாய் போலே
இளைத்தவர்; கீர்த்தி சேர்த்துச்
செழித்தவர்; விழித்த தென்றல்
திரு.வி.க. என்னும் மேதை !

அன்புக்குத் தூதர்; நீதி
ஔவையார்; மெல்லி னத்தின்
முன்னிற்கும் வல்லி னம்போல்
முன்னின்ற தலைவர் ! நாட்டின்
நன்மைக்குப் பாடு பட்ட
நாவலர்! தலைமை தாங்கும்
கன்னிசெந் தமிழைக் காத்த
காவலர் ! கல்விச் செல்வர்.

சைவத்தை மறந்தா ரில்லை
சமணத்தை மறுத்தா ரில்லை
தெய்வத்தைப் பழித்தா ரில்லை
செழித்தசெந் தமிழன் மீது
கைவைக்க முயன்றார் தம்மைக்
கண்டிக்க மறந்தா ரில்லை
பொய்வைத்த சாதி பேதப்
புரட்டினை ஏற்றா ரில்லை !

பழத்தினில் இனிமை வைத்தான்
படைத்தவன்; படித்த மேதை
எழுத்தினில் இனிமை வைத்தார்;
எண்ணத்தை விருந்து வைத்தார் ;
விழிப்பினில் விரம் வைத்தார்;
வெற்றியில் வேகம் வைத்தார்;
உழைப்பினில் ஊக்கம் வைத்தார் ;
உலகுக்கே தம்மை வைத்தார் !

நிலாமுளை போலும் அந்தி
நிழல்போலும் வளரும் நட்பை
உலாவிடும் உலகில் காட்டி
உயர்ந்தவர்; நெருப்புக் கோபம்
இலாதவர்; ஊஞ்சல் நெஞ்சம்
இலாதவர், பதவி ஆசை
இலாதவர்; செத்தும் சாவே
இலாதவர் சேக்கி ழார்போல் !

# பாரதிதாசன்
(1891– 1964)

புதுவையிலே கடலுண்டு காட்சி யுண்டு
புதுவையிலே புகழ்பெற்றார் சிலைகள் உண்டு.
புதுவையிலே சங்கரதாஸ் சமாதி யுண்டு
புதுவையிலே பெரும்புலவர் கூட்டமுண்டு
புதுவையிலே அரவிந்தர் இருந்த துண்டு
புதுவையிலே பாரதியார் வாழ்ந்த துண்டு
புதுவையிலே புதுமையுண்டா ? உண்டு ! பாட்டுப்
புரட்சிக்குப் வித்திட்டார் உண்டா ? உண்டு !

பாட்டேயென் தொழிலென்று சொல்லிக் கொண்டார்
பாரதியார். அவ்வாறே எழுதி வந்தார்.
நீட்டோலைப் பாட்டதனால் இந்த நாட்டின்
நித்திரையை அவர்கலைத்தார். அவர்க்குப் பின்னர்
காட்டாற்று வெள்ளத்தின் வேகம் கொண்ட
கவிதைகளால் பாவேந்தர் புரட்சி செய்தார்.
ஒட்டாண்டிப் பாட்டெழுதி வந்தார்க் கெல்லாம்
ஓய்வளித்தார் தம்பாட்டால் வாழ்வ ளித்தார்

திருத்தத்தில் வெற்றிபெற்றான் ஒட்டக் கூத்தன்
தீர்ப்பளித்து வெற்றிபெற்றான் கரிகாற் சோழன்
நிருத்தத்தில் வெற்றிபெற்றான் ஆட்ட னத்தி
நிதியளித்து வெற்றிபெற்றான் பாரி வள்ளல்
வருத்தத்தில் வெற்றிபெற்றார் வடலூர் வள்ளல்
வாளேந்தி வெற்றிபெற்றான் சேர லாதன்
விருத்தத்தில் வெற்றிபெற்றான் கம்பன்; அந்த
வெற்றியினை இவர்பெற்றார் என்னைப் போல.

படைநடத்தல் போல்நடக்கும் நடையும்; சங்கப்
பழந்தமிழ்நூல் அடையாள நடையும்; பாட்டின்
இடையிடையே இசையசைவு நடையும்; ஓடை
ஏந்திவரும் அலைநடையும் கூட்டிக் காட்டி
மடைதிறந்த வெள்ளம்போல் கவிதை தந்தார்
மலைபோன்று தலைநிமிர்ந்த உவமை தந்தார்.
தடைநடையே அவரெழுத்தில் இல்லை! வாழைத்
தண்டுக்கா தடுக்கின்ற கணுக்கள் உண்டு ?

சூரியனைக் கிழக்கேபார்; பாவின் வேந்தர்
சுடர்விளக்கை நீ, 'குடும்ப விளக்'கி'லேபார்
ஓரிரவை அண்ணாவின் எழுத்தி லேபார்
உயர்கருத்தை எதிர்பாரா முத்தத்தில் பார்
நேரிழையார் நிலாமுகத்தில் சிரிப்பை நீபார்
நீயதனை அவ ரழகின் சிரிப்' பி லேபார்
பாரியவன் சுனையதனில் குளிரை நீபார்
பாரதிதா சன்நூலில் வீரத் தைப்பார்

பங்காருப் பத்தரிடம் பயின்று; மீசை
பாரதியைப் பின்பற்றி நடையை மாற்றிச்
சிங்கார வேலவனைப் பாடிப் பின்னர்
சீர்த்திருத்தத் துறைகண்டு பெரியா ருக்கோர்
நங்கூரம் போன்றிருந்து பிரிந்து; காஞ்சி
நல்லறிஞர் கழகத்தால் பெருமை பெற்றுத்
தங்காமல் விரைந்தோடும் நீர்போல் ஓடித்
தரித்திரத்தில் சரித்திரத்தை முடித்துக்கொண்டார்.

வெடித்தவுடன் விரைந்தோடும் ஆம ணக்கின்
விதையென்றால் பாரதிக்குப் பொருந்தும்; கீழே
அடித்தவுடன் மேலெழும்பும் பந்தென் றிட்டால்
அதுபுரட்சிக் கவிஞருக்கே பொருந்தும்; வீரம்
தொடுத்தமைத்த பாவேந்தர் பாடல் மக்கள்
துணைக்குதவும் தொகைப்பாடல் வல்வில் ஓரி;
விடுத்தகணை தவறியதே இல்லை! வேந்தர்
வெடிமருந்துக் கவிதைகளும் தோற்ற தில்லை.

# சிந்துக்குத் தந்தை

பாட்டுப் படையலினால் – புதுப்
பாதையைக் காட்டியவன்;
சீட்டுக் கவிதையினால் – சில
செய்திகள் சொல்லியவன் ;
பூட்டுக் கவிதைகளை – வியப்
பூட்டிடப் பாடியவன் ;
வேட்டை அரசனைப்போல் – அவன்
வென்று விளங்கியவன்

தந்தைக்குக் கால்களவன் – பெற்ற
தாய்க்கிரு கண்களவன்;
பந்துக்குக் கைகளவன் – பெண்கள்
பார்வைக்குக் காமனவன்.
அந்திக்குத் தென்றலவன் – வைகை
ஆற்றுக்குப் பாலமவன்;
சிந்துக்குத் தந்தையவன் – செய்யுள்
சிங்கத்தின் சிங்கமவன்.

மன்னவன் பேரவையில் – கவி
மாலை தொடுத்தவனாம்;
கன்னியர் மார்பினிலே – தினம்
கண்ணைப் பதித்தவனாம்;
தென்னவன் அன்னவனாம் – சதைச்
சேற்றில் விழுந்தவனாம்;
அன்னவன் பொற்கட்டியாம் – அவன்
அண்ணா மலைரெட்டியாம்.

வாசல் நிலவுகளாம் – நய
வஞ்சக வஞ்சியரின்
ஓசை உதடுகளில் – அவன்
ஒத்திகை பார்த்துவந்தான்.
ஆசை அரங்கத்திலே – எழில்
அங்கச் சுரங்கத்திலே
பூசை புரிவதுதான் – பெரும்
புண்ணியம் என்றிருந்தான்.

யாப்பு முறையறிந்தோன் – அரை
யாப்பெனும் நோய்வழக்கின்
தீர்ப்பில் தளர்ந்துவிட்டான் – உடல்
தேய்ந்து மெலிந்துவிட்டான்!
காப்புக் கவியரசன் – நெடுங்
காலம் உயிர்வாழும்
வாய்ப்பை இழந்துவிட்டான் – பிணி
வந்து மடிந்து விட்டான்.

அள்ளும் அழகுடையோன் – அவன்
அங்கம் அழிந்திடினும்
தெள்ளு தமிழ்க்குதவும் – அவன்
சிந்துகள் வாழ்ந்திருக்கும் !
கொள்ளி அணைவதுண்டு – நிறம்
கொண்ட மயிலிறகின்
புள்ளி அழிவதுண்டோ ? – குளிர்
பூம்புனல் வெள்ளத்தினால்.

மண்ணில் நெடுங்காலம் – அந்த
மகாகவி வாழ்ந்திருந்தால்
பண்ணைப் பயிர்போலே – சந்தப்
பாடல் வளர்த்திருப்பான்.
கண்ணுக் கினியகவி – இன்ப
காவியம் தந்திருப்பான்
வண்ணக் குருத்தோலை – கத்தி
வாய்ப்பட் டழிந்ததுவே.

கழுகு மலைவளத்தைக் கதிர்
காட்டும் தினைப்புனத்தை
ஒழுகும் அருவியினை – எழில்
ஓவியக் காட்சியினைப்
பழகும் தமிழ்மொழியில் – அவன்
பாடி இருப்பதுபோல்
அழகு நயத்தோடு – பிறர்
ஆக்கல் எளிதல்லவே !

# அரசியல் அரிச்சந்திரன்

கூன்விழுந் திருந்த நாட்டின்
　　கூனலை நிமிர்த்த வந்த
வான்புகழ்த் தலைவ ரான
　　வ.உ.சி. புரட்சி செய்ய
நான்வரு கின்றேன். என்று
　　நவின்றவ ராவார். இன்பத்
தேன்சுவைக் கவிஞ ராவார்.
　　தென்னாட்டுத் திலக ராவார்.

வடக்கே ஓர் திலகர்; தெற்கே
　　வ.உ.சி. இல்லை என்றால்
விடுதலை வேக மிங்கே
　　வீழ்ச்சியுற் றிருக்கும். மேலும்,
படிக்கட்டு தன்னில் குந்திப்
　　பழங்கதை பேசும் நாட்டில்,
கொடுப்பதை வாங்கும் பிச்சைக்
　　கொள்கைதான் வளர்ந்தி ருக்கும்.

கொட்டாவித் தலைவ ரெல்லாம்
குனிந்துகொண் டிருந்த நாளில்,
வெட்டாத வாளும்; நன்கு
விளையாத நிலமும்; கைக்கே
எட்டாத கனியும் காயும்
இருந்தென்ன ? வெள்ளைக் காரன்
பட்டாளம் என்ன செய்யும்
பார்க்கின்றேன் ஒருகை என்றார்.

வெள்ளாட்டின் தலையைக் காட்டி
ஓநாயின் கறியை விற்கும்
கள்ளிமுள் நெஞ்சம் கொண்ட
கயவர்வாழ் உலகில், அந்தப்
பிள்ளையோ தூய்மை யான
பிள்ளைப்பால் போன்றி ருந்தார்.
வெள்ளியா கறுக்கும், கட்டி
வெண்ணெயா நீரில் மூழ்கும் ?

இன்றுள்ள தலைவ ரெல்லாம்
ஏதேதோ செய்து செய்து,
குன்றுபோல் செல்வம் சேர்த்துக்
குவிப்பதாய்ச் சொல்கின் றார்கள்.
அன்றைய தலைவர் பிள்ளை
ஆதலால், பணமோ காசோ
ஒன்றுமே சேர்த்தா ரில்லை !
உயர்ந்தவன் புகழ்தான் சேர்ப்பான்.

கனிதரும் மரங்கள், அந்தக்
கனிகளைப் புசிப்ப தில்லை.
தனிச்சுடர் வழங்கும் தீபம்
தனக்காக எரிவ தில்லை.
மனிதருள் சிறந்தோ ரெல்லாம்
மற்றவர்க் காக வேண்டி
அனைத்தையும் இழப்பர். வாழ்வில்
அனைத்தையும் இழந்தார் பிள்ளை.

தகுதியும் திறனும் கொண்ட
தலைவனே வெற்றி காண்பான்.
அகரமே முதலில் நிற்கும்
அவர்நின்றார். சிறந்த முத்து,
மகரமீன் தலையி லன்றி
மற்றமீன் தலையில் என்றும்
அகப்பட்டு விடுவ தில்லை
அவர்போன்றார் இப்போ தில்லை !

# கவிதைத் தலைவர் நேரு

சுவைகண்டார் இலக்கியத்தில்; துணைகண்டார்
திருமணத்தில்; தொடர்ந்து சுற்றிப்
புவிகண்டார்; விந்தைபல இவர்கண்டார்;
வெளிநாட்டுப் புரட்சி கண்டார்.
கவிகொண்ட உரைநடையில் கடிதங்கள்
எழுதிநமைக் கவர்ந்து கொண்டார்.
எவர்கண்டும் காணாத மிகப்பெரிய
கூட்டத்தை இவரே கண்டார்.

பச்சிலைபோல் குளிர்ந்தவுளம் இவர்பெற்றார்.
பேரறிஞர் பழக்கம் பெற்றார்;
விச்சையெனும் கல்வியினை மேன்மேலும்
ஆராய்ந்து விளக்கம் பெற்றார்;
உச்சியெனும் உயர்ந்தநிலை இவர்பெற்றார்
உலகத்தில் உயர்வு பெற்றார்;
எச்சமெனும் புகழ்பெற்றார்; இந்திரா
காந்தியையும் இனிது பெற்றார்.

தென்னகத்தில் ஓர்துறவி விழித்தி ருந்தார்
பசித்திருந்தார்; தீரர் நேரு,
தன்னகத்தில் விழித்திருந்தார், சிறையதனில்
பசித்திருந்தார், தனித்தி ருந்தார்;
முன்னொருசெந் தமிழ்ப்புலவர் பெரும் பசியால்
பறந்திட்டார்: முகமும் சோர்ந்தார்.
பன்மையிலே ஒருமைகண்ட பண்டிதரும்
பலகாலம் பறந்தார் வானில்.

கங்கையிலே, யமுனையிலே, காவிரியின்
கரையினிலே, கத்தித் தத்திப்
பொங்கு கடல் மீதினிலே, பொய்கையிலே,.
வைகையிலே, புன்செய், நன்செய்
எங்கெங்கும் தெளித்திடுவீர் என்சாம்பல்
தனையென்றே எழுதி வைத்தார்.
இங்கிவர்போல் எழுதிவைத்தோர் எவரேனும்
நாட்டிலுண்டோ ? இருந்தால் சொல்வீர் !

எவரைப்போல் இவரென்னும் பேச்சுக்கே
இடமில்லை; இந்த நாட்டில்,
இவரைப்போல் எவரென்னும் பேச்சுக்கே
இடமுண்டாம்; இவர்க்கும் இங்கோர்
தவறுண்டாம் எனக்கூறின் முன்கோபம்
ஒன்றேதான் தவறாம் ! சின்ன
துவரையுள்ளம் கொண்டோரே இக்குறையைப்
பெருங்குறையாய்ச் சொல்வர் கண்டீர்.

(கும்மி)

கண்ணில் கருணையும் கைதனில் நூலையும்
கல்வியை நெஞ்சிலும் வைத்தவராம்.
மண்ணில் அடியையும் விண்ணில் புகழையும்
மார்பில் மலரையும் வைத்தவராம்.
பொய்யழுக் கற்றநல் அந்தணராம் – புவி
போற்றும் புதுமை புரிந்தவராம்;
செய்யும் செயலில் சிறந்தவராம் – பெருந்
தேசத்தை வாழ்விக்க வந்தவராம்.

குழந்தையை நேசிக்கும் பண்டிதராம் – மூடக்
கொள்கையைக் கண்டிக்கும் பண்டிதராம்;
விழுந்த மழைத்துளி போன்றவராம் – புது
விஞ்ஞான ஏக்கம் நிறைந்தவராம்.
சாதி மதங்கள் கடந்தவராம் – அவர்
சத்திய கீர்த்தியைப் போன்றவராம் ;
நீதியும் நேர்மையும் கொண்டவராம் – பகை
நெஞ்சிலும் நட்பாய் நுழைந்தவராம்.

தூங்கிய வேங்கை விழித்ததுபோல் – புகைத்
தூக்கம் கலைந்த நெருப்பதுபோல்
ஆங்கிலர் ஆட்சியை நின்றெதிர்த்தார் – உயிர்
அல்லவோ பாரதம் என்றுரைத்தார்.
ஆலையும் நற்கல்விச் சாலையு மேநமக்
காலய மாகுமென் றேயுரைத்தார்.
மேலை நிலத்தவர் விந்தையைக் கண்டுநாம்
வேடிக்கை பார்ப்பதோ என்றுரைத்தார்.

கூம்பலும் சோம்பலும் கூடாதென்றார் – வெறும்
கூச்சலில் வண்டியும் ஓடாதென்றார்
சாம்பல் எரியுமோ மீண்டுமென்றார் – புதுச்
சாதனை அல்லவோ வேண்டுமென்றார்.

இந்தியா சிறந்த தேசம்
இல்லையா ? என்று கேட்பர் ;
இந்திய நாட்டில் ஏழ்மை
இல்லையா ? என்று கேட்பேன்.
இந்தியா வாழ வேண்டும்;
இரணியன் இறந்த நேரம்
அந்தியா ? பகலா ? என்னும் ?
ஆராய்ச்சி இன்றா தேவை ?

இல்லையே என்று மக்கள்
ஏங்குதல்; எங்கள் வாழ்வு
தொல்லையே துயரே என்று
சொல்லுதல்; சிலர்நம் நாட்டில்
கொல்லைப்பூ வாசம் வீசக்
கூடத்தில் ஊஞ்ச லாடல்
நல்லதா ? இந்தப் போக்கு
நாட்டுக்குத் தேவை தானா ?

காட்டுக்கு முன்கா லத்தில்
கமண்டல முனிவர் தேவை
ஏட்டுக்குத் தேவை என்ன ?
எழுத்தாணி. ஆனால் இன்றோ
காட்டுக்குத் தேவை, நல்ல
காவலே யாகும். பாடும்
பாட்டுக்குத் தாளம் தேவை.
பணத்திற்குத் திட்டம் தேவை.

எனவேதான் புதிய சட்டம்
இயற்றினோம். பொருளா தாரத்
தனிவேதம் எழுதா விட்டால்
தளராதோ நமது நாடு ?
கனிபோதும் அணிலுக் கெல்லாம்;
கயல்போதும் கொக்குக் கெல்லாம் ;
மனம்போது மென்ப தில்லை
என்பதால் வகுத்தோம் சட்டம்.

என்றுநம் நேரு சொன்னார்.
இந்திய நாட்டு மக்கள்
முன்னேற வேண்டு மென்று
முழுமூச்சாய்ப் பாடு பட்டார்.
தென்மொழித் தமிழ்போல்; வீசும்
தென்றல்போல் சிறந்த நேரு,
நன்மையின் தூதர் ! பேச்சு
நாயகர் ! நாட்டின் தீபம்.

நாகரி கத்தின்வ ரம்பனார்;
நாலுதி சைக்கும்வ ரம்பானார்;
ஈகைய ளிப்பதில் கண்ணானார்;
எல்லைவ குப்பதில் கண்ணானார்.
பாகமெ னெச்சம நேரானார்;
பண்பில்ப ழுத்தவர் நேரானார்;
தாகந்த விர்ப்பத்தில் நீரானார்;
தம்முடல் வெந்தவர் நீறானார் !

பாரினில் மேருவும் இன்றில்லை ;
பஃறுளி யாறும்இன்றில்லை;
தாருவில் கற்பகம் இன்றில்லை ;
சகோட யாழும் இன்றில்லை ;
கோரிய செந்தமிழ்க் காப்பியமாம்
குண்டல கேசியும் இன்றில்லை.
ஒரியும் பாரியும் இன்றில்லை;
உத்தமர் நேருவும் இன்றில்லை !

# பெருந்தலைவர் காமராசர்

மகராசர் ! விருதுநகர் காம ராசர்.
மக்கள்படும் துயர்தீர்த்து வந்த நேசர்,
சுகங்காண விரும்புவதே வாழ்க்கை என்பர்.
சுகமென்ன பெருந்தலைவர் கண்டார் ? கையில்
தொகையுண்டா ? தொகைசேர்க்க முயன்ற துண்டா ?
தூக்கமுண்டா ? சோம்பேறித் தனந்தான் உண்டா ?
புகைவாசம் இவருதட்டில் வந்த துண்டு.
பொடிவாசம் இவர்மூக்கில் வந்த தில்லை.

அச்சத்தில் சிலர்நின்ற நேரந் தன்னில்
அசையாமல் இவர்நின்றார். பணங்கா சென்னும்
மிச்சத்தில் சிலர்நின்ற நேரந் தன்னில்
விடுதலைப்போர்ப் படைநடுவில் நின்றார். வாழ்வின்
உச்சத்தில் சிலர்நின்ற நேரந் தன்னில்,
உழைக்கின்ற, தோழர்களின் அருகில் நின்றார்.
எச்சத்தில் சிலர்நின்றார். மனைவி மக்கள்
இல்லாத காரணத்தால் தனித்து நின்றார்.

அரசியலில் அக்பரைப்போல் கெட்டிக் காரர்
அனுபவத்தில் ஈரோட்டுப் பெரியார் போன்றார்
புரிந்துகொள்ளா திருக்கையிலும் பேச மாட்டார்
புரிந்துகொள்ளும் போதுமிவர் பேச மாட்டார்.
புரிந்தபின்னர் இவரதிகம் பேச மாட்டார்.
புவியிலிவர் பெயர்பரவா இடமே இல்லை.
விரிந்தபுகழ் உடையோர்க்கும், கதிரோ னுக்கும்,
விண்ணுக்கும் விளம்பரங்கள் தேவை யுண்டோ ?

அன்றிருந்த மன்னர்களின் கரங்கள் நீளம்;
அவ்வாறே இவர்கரங்கள் மிகவும் நீளம்.
அன்றிருந்த மூவேந்தர் செயல்கள் யாவும்
அருஞ்செயல்கள்; இவர்செயலும் அவ்வா றேயாம்.
குன்றிருந்தால்; மலையிருந்தால், மலையின் பக்கம்
குளிர்ந்தவொரு சிற்றருவி இருந்தால், ஆங்கே
சென்றவர்கள் பயனடைவர்; காம ராசர்
சிந்தனையை ஆதரித்தால் நாடு வாழும் ?

# புத்தர்

சித்திர அழகன் ! ஆழ்ந்த
சிந்தினைச் சிற்பி! காதல்
தித்திப்புச் சுவைத்தோன். வேதச்
சேதியை எதிர்த்த மன்னன்.
கத்தியைத் தூங்க வைக்கும்
கருத்தினைப் பிரித்துத் தந்தோன்
தத்துவ ஞானி, அன்புச்
சரித்திரம் பெற்று விட்டோன்.

# உலகம் போற்றும் உத்தமர்

இல்லற ஞானி. சொந்த
இதயத்தில் இருட்டு இல்லான்
நல்லவன், நாட்டுக் காக
நாடொறும் உழைத்தோன். பாரில்
செல்வமில் லாத செல்வன்.
செயற்கையால் இறந்து பட்டோன்.
புல்லுக்கும் கருணை காட்டிப்,
புகழ்பெற்ற புத்தன் போன்றோன்!

# விவேகானந்தர்

கடவுளைக் கண்ட துண்டா ?
காட்டுவீர் எனக்கு என்று;
தடபுட லாகக் கேட்ட
சரித்திரக் கேள்விக் காரன் ?
படித்தவன்! பட்டா தாரி!
பார்புகழ் துறவி; சாதிக்
கொடுமையை வேர றுக்கும்
கொள்கையோன் ; பிரமச் சாரி!

# செக்கிழுத்த சிதம்பரனார்

மக்களின் தலைவன்! வீர
மானிடன் ! தமிழன் ! தியாகி
சர்க்கரை இனிப்பு ஊட்டும்
தமிழிலே, நூல்வ புத்தோன்.
செக்கினை இழுத்தோன். வாழ்வின்
செழிப்பினை நாட்டுக் கீந்த
தெக்கணச் சிங்கம்! சோழன்
செங்கணன் போலச் செத்தோன்.

# பாரதி !

உத்தர மேரூர்க்குப் பக்கத்தில் உள்ள
திருவதிகைக் கோயில் தெய்வத்தின் மீது.
கனிந்த செந்தமிழ்க் கலம்பகம் ஒன்று
பாடியவர் உத்தண்ட **வேலாயுத பாரதி.**

திருவிளை யாடல் நாடகம் செய்து
கீர்த்தி சேர்த்தவர் **கிருட்டிண பாரதி**

படித்தால் பயன்தரக் கூடிய பல்பொருட்
சூடா மணிநிகண் டென்னும் சுவடியை
இயற்றித் தந்தவர் **ஈசுர பாரதி.**

முயன்று முயன்றுதம் முதுமைப் பருவத்தில்
ஆத்தி சூடி வெண்பாவை அளித்தவர்
இயற்றமிழ்ப் புலவர் **இராம பாரதி**

விருத்தங் ளாலே விசுவ புராணம்
தந்தவர் **முத்துச் சாமி பாரதி**

திருத்தொண்டர் மாலை; தேசிகர் தோத்திரம்
முதலிய நூல்களின் மூலம், பெரும்புகழ்
கொண்டவர் **புதுவை குமார பாரதி.**

ஊடல் பதிகமோ உதட்டுப் பதிகமாம்;
உதட்டுப் பதிகமோ உறவுப் பதிகமாம்.
ஊடலால் ஏற்படும் உணர்ச்சியும் உறவும்,
பக்தி வழிக்குப் பயன்படா தென்பதால்,
ஊடல் பதிகத்தை ஒதுக்கித் தள்ளிக்
கூடல் பதிகம் பாடிக் கொடுத்தவர்
குணங்குடி கொண்ட **கோவிந்த பாரதி.**

புகழ்மிகு ஸ்காந்த புராணகீர்த் தனைகளும்,
பதமே கெடாத பருவப் பதங்களும்,
வேங்கைக் கும்மியும், வேறுபல நூல்களும்
கொடுத்தவர் பெருங்கரை **குஞ்சர பாரதி.**

வள்ளல்முத் திருளப்ப பிள்ளை அவர்களால்
மதிக்கப் பெற்றவர் **மதுரகவி பாரதி.**

கீர்த்தனைகள் எழுதிக் கீர்த்தியொடு விளங்கிய
கிழவர் **கோபால கிருட்டிண பாரதி.**

பேச்சுத் திறத்தால் பெரும்பெரும் பகைவரின்
மூச்சைத் திணறடித்த முத்தமிழ் வித்தகர்
பசுமலை **சோம சுந்தர பாரதி.**

இத்தனை பாரதிகள் இந்நாட்டில் இருந்தும்
ஒரே ஒரு பாரதி உயர்ந்துநிற் கின்றான்!

அவன் யார் ? அவன் யார் ? அவன் யார் ? என்றால்,
அவன்தான், ஆங்கில ஆட்சிக்குச் சனியன்
குப்புற விழாத **சுப்பிர மணியன்.**

நித்திரைக் கவிஞர்க்கு மத்தியில் தோன்றிய
முத்திரைக் கவிஞன் **முண்டாசு பாரதி**

பெண்மீதில் ஆசை வைக்காமல் பெருந்தமிழ்
மண்மீதில் ஆசை வைத்த மகாகவி !

பா—ரதம் ஓட்டிய பாரதி பழைமையைப்
பார்—அதம் செய்கிறேன் என்ற பாரதி!

கட்டுப் படாத கவிஞன் என்றென்றும்
வெட்டுப் படாத வெற்றிக் குரியவன்!

# கொங்கு நாட்டின் கொள்கை வீரன்

வெட்டொன்று துண்டொன்று என்று பேசும்
வெடிக்குரலோன் அழகிரிபோல்; முடிவு தன்னைத்
திட்டவட்ட மாய்க்கூறும் துணிவு பெற்ற
சிங்கார மணிப்பிள்ளை ! பழைய கோட்டை
பட்டயகா ரர் திலகம்! அழியாக் கீர்த்திப்
பரம்பரையி லேவந்த கொள்கை வீரன்.
வெட்டுகின்ற வாள் தன்னை எடுத்து ஏந்தும்
வேந்தர்களின் மலைநாடு தந்த மைந்தன்.

கண்ணுக்கு இமை போன்று இருந்தோன். கட்சிக்
கருத்துக்குக் குறள் போன்று இருந்தோன். நீல
விண்ணுக்கு மழைபோன்று இருந்தோன். ஆனால்
விழலுக்கு நீர்போல இருந்த தில்லை!
எண்ணத்தி லேதெளிவை, சீர்திருத்த
இயக்கத்தி லே கருத்தைப் பதிய வைத்த,
கண்ணழகன், அர்ச்சுனனை எண்ணும் போதுக்
கருங்கடலைத் தான் விழியில் காணுகின்றோம்!

பெருமீசை வைத்திருந்த பன்னீர்ச் செல்வப்
பெருந்தகையார் தனையிழந்து ஏங்கும் போது,
அரும்பைப்போல் சிறுமீசை வைத்த இன்னோன்
அரியதுணை யாயிருப்பான் என்று எண்ணிப்,
பெருங்கனவு நாம்கண்டு வந்தோம். கண்ட
பெருங்கனவை நிறைவேற்றும் செம்மல் தன்னை;
மரணமெனும் உயிர்பிரிக்கும் சக்தி வீழ்த்த ;
மாணிக்கம் போன்றவனை இழந்து விட்டோம்!

மலரிருந்தால் மணம்வீசும்; மதுவை நல்கும்.
மறுபடியும் காயாகும் ; கனியும் ; இந்த
நிலையாவும் நிகழ்தற்குக் கொடியில், அப்பூ
நிச்சயமாய் நிலைத்திருத்தல் வேண்டும். ஆனால்
கலை அழகன் தான் இருபத் திரண்டி லேயே
கண்மூடி விட்டானே என்ன செய்வோம்!
குலைத்தெங்கு வீழ்ந்ததென வீழ்ந்திடாமல்,
கொள்கைதனை இவன்போன்று செழிக்கச் செய்வோம்

## இறவாத புகழ் பெற்ற இக்பால்

பஞ்சாபி லேபிறந்த முஸ்லிம் ; பேசும்
        பலமொழிகள் கற்றுணர்ந்த கவிஞன்; மக்கள்
நெஞ்சத்தி லே உலவும் ஆசை போன்றோன்,
        நீடுபுகழ், நாட்டுக்குத் தேடி வைத்தோன்.
அஞ்சாத போராற்றல் பெற்ற சிங்கம்.
        அறிஞர்க்கெல்லாம் அறிஞன்; அழகன்; ஞானி,
சஞ்சீவி; சாகாத மருந்து ; இக்பால் !
        சரித்திரத்தை வளர்த்தஒரு புதிய ஏடு!

ஆராய்ச்சிக் காவியங்கள் எழுதி வைத்து
        அத்தமித்துப் போய்விட்டப் பிறைவிளக்கு
ஓராயிரம் ஆண்டு நகர்ந்திட்டாலும்,
        உலகுக்குச் செங்கதிர்போல் தேவைப் பட்டோன்.
நேராத துயரங்கள் நேரும் போதும்;
        நீரலைபோல் அசையாது, ஞானியாகும்
பேராற்றல் பெற்றிருந்த பெரியோன்! கல்விப்
        பேச்சுக்கோர் மூச்சைப்போல் இருந்து சென்றோன்.

சுவர்போலும், கல்போலும், அந்தக் கல்லைச்
சுடுகின்ற தீச்சூளை அடுக்கு போலும்,
புவி மீதுப் பலபேரைப் பார்த்தல் கூடும்.
பொருளோடு, புகழோடு, மேன்மை செய்யும்
சுவையான பல்கலையின் திறமை யோடு
சுற்றிவரும் இப்பெரிய உலக மண்ணில்,
இவனைப்போல் மிகப்பெரிய அறிஞன், ஆயின்
இலைபோலச் சுலபத்தில் கிடைக்க மாட்டான்.

காயிடத்தில், கனிகின்ற தன்மையுண்டு.
கல்வியிடம், சிந்தனையின் திறமை யுண்டு.
சேயிடத்தில்; ஞானிகளின் மனது உண்டு.
தினையிடத்தில், சத்தூட்டும் அணுக்களுண்டு.
தாயிடத்தில், சாகும்வரை, கருணையுண்டு.
தாவிவரும் அலையிடத்தில், குளிர்ச்சியுண்டு.
யாவும் ஓர் கூட்டுறவாய் இருந்தாற் போன்று.
இருந்திட்ட ஆச்சரியக் கவிஞன் இக்பால்!

# ஏழைகளைச் சிரிக்க வைத்தவன்

வானகத்தச் செங்கதிரைப் போல, மூக்கு
வாங்கிவிட்டுக் கொண்டுவரும் காற்று போல,
ஆனைமுதல், ஆழ்கடலின் பொருள னைத்தும்,
அகிலத்தில் அனைவர்க்கும் சொந்த மாகும்.
ஏனிந்த பேதங்கள் பிறகு ? ஏழை
இனம் ஒன்று இருப்பானேன் ? மிரண்டு பார்க்கும்
மானழகு விழிப்பெண்டி ரோடு கொஞ்சி
மாடியிலே வாழ்வானேன், மற்றோர் கூட்டம் ?

காரல் மார்க்ஸ் இவ்வாறு எண்ண மிட்டான் ;
கண்டித்தான் ; பொருளறிவு நூலைத் தந்தான்.
பாரனைத்தும் மேன்மை பெற, மேலே ஏறப்
படிபோன்று இருந்துவரும் அந்த நூலின்
சாரத்தை இம்மனிதன் உணர்ந்து, மக்கள்
சரித்திரத்தைத் திருப்புதற்குத் தீர்மா னித்து,
வாரத்தால், மாதத்தால், முதிர்ந்த, சொந்த
வாழ்நாளை நாட்டுக்கே அர்ப்பணித்தான்.

கடவுளர்கள், பூசுரர்கள், ஆதாம், ஏவாள்,
கலிகால தெய்வங்கள் ; அறிவு தன்னைக்
குடை சாய்க்கும் மதமனிதர், எவரும் இந்தக்
குவலயத்தில் இதுவரையில் செய்திடாத,
வெடிவானத் திடிப்புரட்சி செய்து, ஏழ்மை
வேதனையைப் போக்கியவன் இந்த குள்ளன்!
தடையாவும் தூள்! தூள்!! தூள்!!! சாரின் ஆட்சி
தவிடுபொடி; இவனாலே, ருசிய நாட்டில்!

இருட்டாக இருந்திட்ட ருசிய நாட்டுக்
கிவன் ஒருவன் இல்லாது போயிருந்தால்;
திருட்டுக்கள்; தீச்செயல்கள்; பசியினாலே ;
தினந்தோறும் இறப்பவரின் கணக்கு ; செல்வம்
பெருக்கிவரும் பணக்காரன், ஏழை, ஏன்னும்
பேதங்கள் இருந்தபடி இருந்திருக்கும் !
எரிக்கின்ற நெருப்பாக இருந்து வந்த
இவன்தான் காண் லெனின் என்னும் புரட்சி வீரன் !

# சோணாடு ஈந்த செந்தமிழ்ச் செல்வம்

நெல்விளையும் தஞ்சைமா வட்டந் தந்த,
நீல நிறச் சிற்பத்தை; வையத் தேடும்
செல்வத்தைத், தென்பகுதி சமுதா யத்தைச்
சீர் திருத்தி வந்திட்ட நமது பன்னீர்ச்
செல்வத்தைப் போற்சிறந்த மேதை; இந்திச்
செகந்தன்னில் தோன்றுவது அரிது! இந்த
நல்லறிஞன், நற்குணத்தோன், குறைபா டின்றி
நாடாளத் தகுதியுளோன் இப்போ தில்லை!

பலவகையில் தமிழர்க்கு நன்மை செய்த
பண்பாளன் ! முன்னாள், தென் னிந்தி யாவின்
நலஉரிமைச் சங்கத்தில் பங்கு ஏற்று
நல்லதொரு தளபதியாய் விளங்கி வந்தோன்!
இலையாகக் கொழுந்தாகப் பெரியா ரின்முன்,
இந்நாட்டில் பலமனிதர் இருந்த போது,
மலராகப், பெரியாரே போற்று கின்ற
மலையாக, இருந்தவர் நம் பன்னீர்ச் செல்வம்!

தோளுக்குத் தந்தமலர் மாலை தன்னைத்
தூயபெரி யாரவர்கள், வயது மிக்கத்
தாளுக்குச் சூடுகின்றேன் என்று கூறித்
தலைவர்க்கு மரியாதை தந்த, இந்த
ஆளழகன் அருஞ்செயலோன், நமது நாட்டை
ஆள்வதற்கு இன்றில்லை. ஆத லாலே,
தேளுக்கு அதிகாரம் கொடுத்தாற் போன்று,
தேசத்தை ஆள்கின்றார், இப்போ துள்ளோர்!

ஆரெதிர்ப்பு வந்தாலும் ஆஞ்சி டாத
ஆண்சிங்கம்! பெரும்பண்ணை யூரின் தங்கம்!
பேரறிவு உடையோனின் திறமை கண்டு,
பெருமக்கள் வியக்கின்ற போது, இங்கே
ஓரறிவு பெற்றதொரு மரத்தைப் போன்றோர்
உளறுவதில் பொருளுண்டா ? சத்து உண்டா ?
நாரெங்கே ? மலரெங்கே ? உலகம் போற்றும்
நம்பன்னீர்ச் செல்வமெங்கே ? இவர்கள் எங்கே ?

# மணித்தமிழ் வளர்த்த மருதப்பர்

ஐயர்கள் ஏமாற்றும் தேவர்—அவர்
ஆரெனில், முப்பத்து முக்கோடித் தேவர்.
மெய்யாய் இருந்திட்ட தேவர் இவர்
வெல்லுங் கவிச்சபை கூட்டிய தேவர்.
அரிவாளை ஓங்காத தேவர். அள்ளி
அள்ளிக் கொடுத்திட்ட மருதப்ப தேவர்
விரிந்த உளங்கொண்ட தேவர்—படை
வீரர் பரம்பரை யில்வந்த தேவர்.

அரசர் பதவிக்கு உரியர்—அறி
வாளருடன் நேரம் போக்கும் பிரியர்.
மருதப்பர் காட்சிக்கு இனியர்—இவை
மட்டுமன்று, இவர் மிகவும் எளியர்
மூச்செனும் தாய்மொழி காத்தோன்—பல
மொழிதனையும் கற்று அறிவினில் மூத்தோன்.
பேச்சில் கனிச்சுவை சேர்த்தே தான்—மக்கள்
பேதத்கதைவா திட்டுப்பெரும்புகழ் சேர்த்தோன்.

சோலைகள் ஏற்படச் செய்தோன்—வீணர்
சோம்பேறிகள், நாட்டின் நோய்என வைதோன்.
நூலறிவை ஓங்கச் செய்தோன்—நன்
நூலுக்கு ஓர் உரை எழுதிடச் செய்தோன்.
கண் போன்ற தமிழை வளர்த்தோன் – பால்
காவடிச் சிந்துவின் காரண கர்த்தர்
அண்ணமலை ரெட்டியார்க்கு—ஆடை
ஆபரணம் மிக அதிகம் அளித்தோன்.

ஊற்றுமலை சீதக் காதி—இவர்
உயர்ந்த அறிஞர்! பெருந்தர்க்க வாதி.
போற்றும் படிவாழ்ந்த சோதி—தமிழ்ப்
புலவரிடம் தினம் பேசும் அந்தாதி.
வயிற்றைத் தடவிடும் தொல்லை—இவர்
வாழ்ந்திட்ட காலத்துப் புலவர்க்கு இல்லை.
மயக்கும் அரசியல் சொல்லை—நம்
மந்திரிபோல் இவர்சொன்னதே இல்லை!

குறவன் மலையை நினைப்பான்—நெல்
கொடுக்கும் நிலந்தனை உழவன் நினைப்பான்
மறுவற்ற தமிழை இதுபோல்—இந்த
மருதப்பரும் தினம் நினைப்பார்—நினைத்தார் !
தலைப்பாகை இவருக்குப் பிடிக்கும்—சில
சமயத்தில் இவர்வாய்க் கவிதைகள் வடிக்கும்.
மலைவளம் இவருக்குப் பிடிக்கும்—செத்த
வடமொழி உயர்வெனில் இவர் ரத்தம் துடிக்கும்.

# மதுரத் தமிழ் காக்கும் மயிலை சிவமுத்து

எளியநடை; எளியஉடை ; எளிய வாழ்க்கை ;
எப்போதும் தமிழ்மொழியை வளர்க்குந் தொண்டு;
வெளிநடிப்பை, விளம்பரத்தை, விரும்பா உள்ளம்;
வித்தைக்கு முத்து ; இவர் மயிலை முத்து.
பிளவுதனை உண்டாக்கும் சாதி பேதப்
பிரிவினையை எதிர்கின்ற வடலூர் வள்ளல்.
விளக்கேற்றி வைத்துவரும் பெரியார்; கல்வி
விழிப்புதனை உண்டாக்கும் பாண்டி வேந்தன்!

நெருப்புக்குப் புகைஉண்டு; ஆனால் விண்ணில்
நீந்துகின்ற கதிருக்குப் புகையேன் இல்லை ?
இரவினிலே தாமரைப்பூ தூங்கு வானேன் ?
இலைப்பந்தல் போடுகின்ற மரங்கள் யாவும்,
தரைமீது நடக்காமல் நின்று கொண்டே
தவிப்பானேன் எப்போதும் ? என்று பிஞ்சுப்
பருவத்தில் தன் தந்தை இடத்தில் கேட்டுப்
பகுத்தறிவுத் திறமைதனை வளர்த்த மேதை!

மாண்புடைய மூவேந்தர் சிறப்பு மிக்க
வரலாற்றை உரைக்காமல், வடக்கு நாட்டுப்
பாண்டவரின் பெருமைதனைப் பற்றிப் பேசும்
பண்டிதர்கள் என்பவர்கள், இந்த நாட்டின்
தூண்மனிதர்; சுணையற்ற தமிழர்—என்று
சொல்லுதற்கு அஞ்சாத புலவர்! இங்கு,
ஆண்டவனைக் கருங்கல்லில் பாரீர் என்னும்
ஆரியத்தின் சூழ்ச்சிதனை வீழ்த்தும் ஆசான்!

விழிக்காக, எழில்காத்துக் கொண்டி ருக்கும்;
விதைக்காக, வயல்காத்துக் கெண்டி ருக்கும்;
இழைக்காகத், தறிகாத்துக் கொண்டி ருக்கும்;
இசைக்காக, செவிகாத்துக் கெண்டி ருக்கும்;
மழைக்காகப், பயிர்காத்துக் கொண்டி ருக்கும்;''
வாடாத சான்றோரின் வழியில் வந்த
பிழையில்லாப் பேரறிஞர் இவர்சொல் கேட்கப்
பெரும்புலவர் தினந்தோறும் காத்தி ருப்பர் !

# பாம்பன் நகரத்து பர்னாட்ஷா

பர்னாட்ஷா போல்தனது முடிவு தன்னைப்
பயமின்றி எடுத்துரைத்து வந்த தாலே,
கர்விளனப் பலராலும் நினைக்கப் பட்ட
கவிமனிதர் தான் இந்த பாம்பன் ஸ்வாமி
நர்மதையைக் கங்கைதனை நினைக்கும் நாளில்,
நம்நாட்டுக் காவிரியை நினைக்க வைத்து,
பர்வதத்தோள்; தமிழ்வீரப் பார்வை; நன்கு
பாடுகின்ற திறமைபெற்று இருந்த சிங்கம்

காந்தியைப்போல் உணவுமுறை, ஒழுக்கந் தன்னைக்
கடைப்பிடித்த கவிவாணர்; தர்க்க வீரர்
மாந்தளிர்போல் மேனியுள மனைவி யோடு,
வள்ளுவர்போல் இல்லறத்தை நடத்தி, வாழ்ந்து,
சாந்தநிலை தனையடைய விரும்பிப், பின்னர்,
சந்யாசி வாழ்வைமேற் கொண்ட போதும்,
தீந்தமிழ்க்குத் தீங்குசெயும் கூட்டத் தாரைத்
தினந்தோறும் எதிர்த்திட்ட சைவ ஞானி!

உரைநடையில் எழுதியுள நூற்கள் போக
உயர்தமிழ்க்குத் தளராது தொண்டு செய்து,
அருஞ்சொற்கள் தனைவைத்தா ராயி ரத்து
அறுநூற்று அறுபத்து ஆறு செய்யுள்,
நரைக்கிழவர் பாடியுளார் ; கடுமை யான
நடைதனிலே அச்செய்யுள் அமைந்த போதும்
சரியான சிந்தனைகள்; உவமை, வண்ணம் ;
சந்தநயம் அத்தனையும் அவற்றில் உண்டு.

எண்ணங்கள் தருபவனே சிறந்தோன் ; கோழை
எனப்படுவோன் நூறுமுறை இறந்தோன்; வாழ்வில்
கண்எனக்கு எதுவென்றால், தமிழ்தான் ! நல்ல
கவிதைகளே என்மூச்சு, என்று ரைத்து,
மண்ணுக்குள் தூங்குகின்ற பொன்னைப் போல,
வழக்கினிலே வாராமல் இருந்து வந்த
எண்ணற்ற தமிழ்ச் சொல்லைத் தனது நூலில்
எடுத்தெடுத்துக் கையாண்ட தாடிக் காரர்.

# சிந்தனைச் சிற்பி – சிங்கார வேலர்

வழக்கறிஞன்! பெருந்தர்க்க வாதி! வாழும்
மானிடர்க்கு விஞ்ஞான எண்ணம் தந்தோன் .
கிழப்பருவம் வரும்வரையில் வாழ்ந்திருந்து
கீழ் மண்ணாய் மாறிவிட்ட உலக மேதை !
எழுத்தாளன்; பெய்மதத்தை; ஆரியத்தை;
எதிர்த்திட்ட உளிமனிதன் அறிவில் மூத்தோன்.
முழுத்தாடி வைத்திருக்கும் பெரியாருக்கு
மூலபலம் போன்றிருந்த மூச்சு நண்பன்!

சாத்திரத்தின் ஊழல்தனை எடுத்துக் கூறிச்,
சத்துள்ள காரணத்தால் மாற்றஞ் செய்தோன்.
நாத்தீக மாநாட்டை முதலில் இந்த
நாட்டினிலே நடத்தியவன்; வைதீ கத்தைத்
தீர்த்துவிட்டுத் தான்மற்ற வேலை என்று
தினந்தோறும் அதற்காகப் பாடு பட்டோன்.
மாத்தமிழன்! மீனவர்க்கு முத்து! தெய்வ
மனப்போக்கை மாற்றி வந்த சென்னைப் புத்தன்.

"குடியரசு" வாரஇதழ் தன்னில், இந்தக்
கோமானின் கட்டுரையைப் படித்து, நெஞ்சு
வெடிப்புற்று இருந்திட்ட மக்கள்; வீர
விழிப்புற்று எழுந்ததனை—மதத்தைக் காக்கும்
ஒடிபட்ட சுள்ளிகளா அறிவர் ? ஆனால்
ஒழிந்தானே என்றிடுவர்—பார்ப்பானுக்கு
எடுபிடிக ளாயிருக்கும் முண்டங் கட்கு
இவர் போன்ற பேரறிஞன் பகைவன் தானே!

சிக்கனத்தில் இவரும் ஓர் பெரியார்! நல்ல
செயலன்றித் தீச்செயலை அறியார். நாட்டு
மக்களுக்கு வேண்டிதோர் மனிதன். வாழ்வில்
மறுமலர்ச்சி எண்ணத்தை விட்டுச் சென்றோன்.
திக்கெட்டும் புகழோங்கும் அறிவு பெற்றச்
சிங்கார வேல்தன்னை மறந்து, நாட்டில்,
தக்கைகளை, மரத்தூளை வைத்துக் கொண்டு
சந்தனத்தை விட்டெறிந்தால் யார்க்கு நட்டம் ?

# நமக்குக் கிடைத்த நாத்திகக் கவிஞர்

கூத்தடித்துக் கொண்டிருக்கும் புராண நூலின்
கொட்டத்தை அடக்கிவரும் கவிஞன். நல்ல
நாத்தீகன் நற்றமிழன் இந்நூற் றாண்டு,
நம் நாட்டுக் களித்துள்ள, எழுத்துச் செல்வம்.
ஆத்திகர்க்கு வேப்பங்காய், நமக்கு மாங்காய்.
அகத்தியர்போல் உடல்மரணம் மட்டும் உள்ளோன்.
சூத்திரனே என்பவனை உதைக்கச் செல்லும்
சுப்புரத்தி னக்கவிஞன் எதிர்ப்பில் வாழ்வோன்.

நீச்சலடித் திடுதற்கே அச்சங் கொள்வோர்
நீர்க்கடலி லாமுத்து எடுப்பர் ? ஆட்டின்
மேய்ச்சலைப்போல் நுனிக்கல்விப் பயிற்சி பெற்றோர்
முத்தமிழை உணர்வாரா ? உணரார் ஆனால்
பேச்சுமட்டும் பிரமாதம் அவர்க்கு. இந்தப்
பெருங்கவிஞர் அவர்க்கெதிரில் வந்து விட்டால்
காய்ச்சலொடு படுப்பவரும் உண்டு! இன்னார்க்
கவிதையினால் பிழைப்பவரும் நாட்டில் உண்டு!

கல்லாதார் இவர்க்கவிதைத் தன்னைக் கேட்டால்
கட்டாயம் இருசெவிக்கும் பசியெ டுக்கும்.
சொல்லாட்சி; சுயவிளக்கம்; புதுமை; காதற்
சுவையோடு இவரளிக்கும் உவமை யாவும்,
எல்லார்க்கும் வந்திடுமா ? கிட்டத் தட்ட
எல்லோரும் பேர்பெறுவர். ஆனால் கீர்த்தி,
எல்லாரும் பெறுவதிலை. அந்தக் கீர்த்தி,
இவர்போன்றக் கவிஞர்களே பெறுதல் கூடும்.

பேரறிஞன் உமர்க்கய்யாம், "பெண்ணே பாரில்,
பெரும்போதைப் பொருளென்றான் இவரும் சொன்னார்,
ஊருக்கு உழைப்புதூன் " யோகம்" என்று
உரைத்திட்டார் பாரதியார் இவரும் சொன்னார்.
ஆரியத்தில் சிக்காதீர் உலகீர்—என்றார்,
அருட்பாவில் ராமலிங்கர். இவரும் சொன்னார்.
வேரறுக்கும் இப்புரட்சிக் கவிஞர், கற்றார்
விரோதத்தைச் சர்க்கரையென் றெண்ணும் மன்னர்.

தேரிழுக்கும் தேசத்தில், தருமன் போன்று,
சீட்டாடும் அரசாங்கந் தானிருக்கும்.
வாரிருக்கு, தோலிருக்கு, என்னும் நந்தன்
வம்சத்தான் அந்நாட்டில் உள்ள மட்டும்
ஏரிழுக்கும் எருதொன்று தொலைந்தால், அந்த
இடைவேளை உழவுக்கு அவனே மாடு.
ஆரியத்தை ஆதரிக்கும் ஆண்டிப் பாட்டே
அந்நாட்டின் அரசாங்கப் பாட லாகும்.

இவ்வாறும்—இவை போன்று இன்னும்; மாந்தர்க்
கெத்தனையோ சிந்தனைகள் தந்த சிங்கம்,
செவ்வாழை மரம்போன்று; தனக்குப் பின்னர்
செவ்வாக்குப் பரம்பரையை வைத்தி ருப்போன்.
எவ்வாறு பார்த்தாலும், இவர்க்கு ஈடு
இவரேதான். இதுவரையில், கிளிகள் கொத்திக்
கௌவாத கொய்யாவும் இல்லை, இன்னார்க்
கவிதைகளை வெறுப்பாரும் நாட்டில் இல்லை.

# பேரறிஞர் அண்ணா

சரியான வழியைக் காட்டும்
தலைவனே, சமுதா யத்தின்
மரியாதைக் குரியோ னாவான்.
மக்களின் தலைவ னாவான்.
பெரியாரால் மதிக்கப் பெற்ற
பேரறி வாளர் அண்ணா
விரிவான கீர்த்தி பெற்று
விளங்கிய தலைவ ராவார்.

தங்கத்தால் ஆன தட்டில்
சாப்பிடும் தலைவ ருண்டு.
தங்களுக் காகப் பட்டுச்
சட்டைகள் தைப்பா ருண்டு.
மங்கிப்போய் இருந்தோர்க் கெல்லாம்
மறுவாழ்வு தந்த மேதை,
இங்குளோர் வியக்கும் வண்ணம்
எளிமையாய் வாழ்ந்து வந்தார்.

கள்ளியின் வயிற்றில் தோன்றும்
கட்டையே அகிலாம். அந்தக்
கள்ளியில் தோன்று கின்ற
கட்டைபோல்; ஏழை வீட்டுப்
பிள்ளையாய்ப் பிறந்து, சேதுப்
பிள்ளையை வென்ற மேதை
வெள்ளுடை உடுத்த தன்றி
வேறுடை உடுத்த தில்லை

தாழம்பூ முட்பூ; கொக்கு
சந்தேகப் படும்பூ; நெஞ்சில்
வாழும்பூ அன்பு; வானம்
வளர்க்கும்பூ நிலாப்பூ; வெள்ளைத்
தாழம்பூ வேட்டி கட்டித்
தறித்துண்டு தோளில் போட்டு
வாழிய தமிழில் பேசி
வந்தவர் அறிஞர் அண்ணா.

எள்விதை கறுத்தி ருக்கும்
என்றாலும், எள்ளின் பூவோ,
வெள்ளையாய் இருக்கும். அண்ணன்
மேனிதான் கறுப்பே யன்றி,
உள்ளமோ தூய வெள்ளை.
உடுத்திய உடையும் வெள்ளை.
அள்ளிப்போய் அழகு பார்க்கும்
அழகான முத்து வெள்ளை.